செ.வெ.எண்: 34 நாள்:18.05.2021

**கோயம்புத்தூர் மாவட்டத்தில் கொரோனா சிகிச்சைக்கு கூடுதல் படுக்கை வசதிகள் அமைக்கப்பட்டு வருவதை , மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.கா.ராமசந்திரன் அவர்கள், மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.அர.சக்கரபாணி அவர்கள் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.**

---

கோயம்புத்தூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, குமாரகுரு பொறியியல் கல்லூரி, அரசு தொழில்நுட்ப கல்லூரி ஆகிய இடங்களில் கூடுதலாக படுக்கைகள் வசதிகள் அமைக்கப்பட்டு வருவதை இன்று(18.05.2021) மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.கா.ராமசந்திரன் அவர்கள், மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.அர.சக்கரபாணி அவர்கள் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். இவ்ஆய்வின் போது, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எஸ்.நாகராஜன் இ.ஆ.ப., மாநகராட்சி ஆணையாளர் திரு.பெ.குமாரவேல்பாண்டியன் இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இராமதுரைமுருகன், மாநகராட்சி துணை ஆணையாளர் திருமதி.மதுராந்தகி, அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.நிர்மலா வருவாய் கோட்டட்சியர்(வடக்கு) திரு.ரவிசந்திரன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பாக, பல்வேறு சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன்படி, கோயம்புத்தூர் மாவட்டத்தில் கொரோனா பரவலை கட்டுப்படுத்த மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் ஆகியோரை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நியமிக்கப்பட்டு, கடந்த சில நாட்களாக

தொடர்ந்து, கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் கொரோனா சிகிச்சை அளிக்கும் மருத்துவமனைகள் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, ESI மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை, பொள்ளாச்சி, மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனை, மதுக்கரை அரசு மருத்துவமனை ஆகிய 5 அரசு மருத்துவமனைகளிலும், கொரோனா சிறப்பு சிகிச்சை மையங்கள் காருண்யா கல்லூரி, பாரதியார் பல்கலைகழகம், கொடிசியா வளாகம், அண்ணா பல்கலைக்கழகம் கோவை, தமிழ்நாடு வோளண்மை பல்கலை கழகம், பி.ஏ. கல்லூரி பொள்ளாச்சி, சீனிவாச கல்யாண மண்டபம் (சித்தா முறை சிகிச்சை மையம்) வித்ய விகாஷ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, காரமடை ஆகிய 8 கொரோனா சிறப்பு சிகிச்சை மையங்கள், மேலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள 62 தனியார் மருத்துவமனைகள் மற்றும் 10 தனியார் தங்கும் விடுதிகளிலும் கெரோனா வைரஸ் தொற்றுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

கொரோனா தொற்றுக்கு சிகிச்சை அளிக்க கூடுதல் படுக்கை வசதிகள் தேவைப்படுவதையொட்டி, மேலும், சரவணம்பட்டி பகுதியில் உள்ள குமரகுரு பொறியியல் கல்லூரியில் கூடுதலாக 360படுக்கை வசதிகள் அமைக்கப்பட்டு வருவதையும், கோவை அரசு கலை மற்றும் அறிவியில் கல்லூரி கலையரங்கத்தில் 40 படுக்கைகள், கைப்பந்து மைதானத்தில் 80 படுக்கைகள், “ Y ” BLOCK -ல் 35 படுக்கைகள், “ N ” BLOCK -ல் 35 படுக்கைகள், “ H ” BLOCK -ல் 70 படுக்கைகள் என 260 படுக்கைகள் வசதிகளை ASCEN மற்றும் CREDAI அமைப்பும் இணைந்து அமைத்து வருவதையும், அரசினர் பொறியியல் தொழில்நுட்ப கல்லூரியில் உள்ள விடுதிகளான தாமிரபரணி இல்லத்தில் 113 படுக்கைகள், வெள்ளாறு இல்லத்தில் 81 படுக்கைகள், வைகை இல்லத்தில் 98 படுக்கைகள், கோதையாறு இல்லத்தில் 198 படுக்கைகள் என 490 படுக்கைகள் வசதிகளும் என மூன்று இடங்களில் மொத்தமாக 1110 படுக்கை வசதிகள் அமைக்கப்பட்டு வருவதையும்,

மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டதுடன், படுக்கை வசதிகள் அமைக்கும் பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்**